[1980 ஜூலை 11

காலம்.	பெரு மொத்த வரவு.
(1)	(2)
	(ரூபாய் இலட்சத்தில்.)
1975–76	1,11·39
1976–77	2,64·00
1977–78	2,70·02
1978–79	2,08·07
1979–80	2,66·08

1979–80ஆம் ஆண்டில் 28 சதவீதம் அதிக வசூல் கிடைத்தது.

18. 1979–80ஆம் ஆண்டுக் காலத்தில் வணிக வரித்துறையின் நிர்வாகம் வழக்கம்போல அரசு எதிர்பார்த்த அளவுக்கு நல்ல முறையில் அமைந்துள்ளது. வரி செலுத்துவோருக்கும் துறை அதிகாரிகளுக்குமிடையே நல்லுறவு காணப்படுகிறது. இதனால் வணிக வரிகள் நிர்வாகம் நல்ல முறையில் நடைபெறுவதற்கு ஏதுவாகிறது.

சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

இணைப்பு III

[....19....ம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.]

வணிகவரிகள்—அறநிலையத் துறை.

மானியக்கோரிக்கை எண் 5.

முத்திரைத்தாள் நிர்வாகம்.

1. பொது.—முத்திரைத்தாள் வருவாய்க் கணக்கைப் பொதுவாக வருவாய்த்துறை வாரியம் நிர்வகித்து வருகிறது. ஒவ்வொரு மாவட்டத்திலும் முத்திரைத்தாள் வருவாய்க் கணக்கை கருவூல

1980 ஜூலை 11]

அதிகாரிகள் நிர்வகித்து வருகின்றனர். அவரவர் மாவட்டங்களில் முத்திரைத்தாள்களை வினியோகம் செய்யவும் விற்கவும் அவர்கள் பொறுப்புடையவராவர். பொதுமக்களுக்கு தேவைப்படும் முத்திரைத்தாள்களை வழங்க அந்தந்த மாவட்டங்களிலுள்ள கிளைக் கருவூலங்களில் போதுமான அளவிற்கு முத்திரைத் தாள்கள் இருப்பில் இருக்கும்படி பார்த்துக் கொள்வது கருவூல அதிகாரிகளின கடமையாகும்.

2. முத்திரைத்தாள்களுக்கு தேவைக்குறிப்பாணை கொடுத்தலும், முத்திரைததாள்களை வழங்குதலும்.—20 ரூபாய்க்கு மேலாக மதிப்புடைய முத்திரைததாள்களுக்கான தேவைக் குறிப்பாணை ஆண்டுக்கொருமுறையும் 20 ரூபாயும் அதற்குக் குறைவாகவும் மதிப்புள்ள முத்திரைத்தாள்களுக்கான தேவைக் குறிப்பாணை நான்கு மாதங்களுக்கொருமுறையும் கொடுக்கப்படுகின்றன. எல்லா மாவட்டங்களுக்கும் உரிய தேவைக் குறிப்பாணைகளை சென்னை முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் தொகுத்து அவற்றை நாசிக்கிலுள்ள முத்திரைத்தாள் மையப்பண்டக சாலைக்கு அனுப்பி வைக்கிறார். இவ்வாறு தேவைக்குறிப்பாணைகளை ஒன்றாகத் தொகுக்கும்போது, எல்லா மாவட்டங்களிலும் வட்டத்தலைமையிடங்களிலும் போதுமான அளவிற்கு முத்திரைத்தாள்கள் இருப்பில் இருக்குமாறு பார்த்துக்கொள்ளப்படுகிறது. முத்திரைத்தாள் கண்காணிப்பாளர் கொடுத்தத் தேவைக்குறிப்பாணைகளின் பேரில் நாசிக் முத்திரைத்தாள் கட்டுப்பாட்டு அதிகாரி, தம்மிடம் இருப்பு இருப்பதைப் பொறுத்து முத்திரைத்தாள்களை நேரடியாக கருவூல அதிகாரிகளுக்கு வழங்குகிறார். இப்போதெல்லாம் கருவூல அதிகாரிகள் நாசிக் அச்சகத்திடமிருந்து ஒழுங்காக முத்திரைத் தாள்களைப் பெற்று வருகின்றனர். முத்திரைத்தாள்கள் வழங்கப்படுவதை கருவூல அதிகாரிகளும் முத்திரைத்தாள் மைய அலுவலகத்தினரும் கண்காணித்து வருகின்றனர். குறிப்பிட்ட மதிப்புடைய முத்திரைத்தாள்கள் பற்றாக்குறையாக இருந்தால் அவை அதிகமாக இருக்கிற மாவட்டத்திலிருந்து தேவைப்படுகிற மாவட்டத்திற்கு முத்திரைத்தாள்கள் வழங்கவும் ஏற்பாடு செய்யப்படுகிறது.

3. விற்பனை —(i) அரசு அலுவலகங்கள் மூலமாக.— கருவூல அதிகாரிகளும் கிளைக் கருவூல அதிகாரிகளும் அலுவலக நேரத்தின்போது பொதுமக்கள் கேட்கும் முத்திரை வில்லைகளையும் முத்திரைத் தாள்களையும் விற்க அதிகாரம் அளிக்கப்பட்டிருக்கிறது. உரிமம் பெற்ற மேலும் தெரிந்தெடுக்கப்பட்ட உதவிப்பதிவு அலுவலகங்கள் சிலவும் முன்னோடித் திட்டத்தின் கீழ் முத்திரைத்தாள் விற்கவும் அதிகாரமளிக்கப்பட்டிருக்கிறது. இத்திட்டம் நல்ல முறையில் செயல்படுவதால் இதனை மேலும் ஐம்பது உதவிப் பதிவு அலுவலகங்களில் அமுலுக்குக் கொண்டு வரும் பொருட்டு ஆணையிடப்பட்டுளது.

(ii) உரிமம் பெற்ற முத்திரைத்தாள் விற்பனையாளர்கள் மூலமாக.—கருவூல அதிகாரிகள் மற்றும் ஏனைய அதிகாரிகள் தவிர, உரிமம் பெற்ற முத்திரைத்தாள்கள் விற்பனையாளர்களும் பொதுமக்களுக்கு முத்திரை வில்லைகளையும், முத்திரைத் தாள்களையும் விற்கின்றனர்.

(iii) முத்திரைத்தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெறுதல்.—கிரயப் பத்திரங்கள், அடைமானப் பத்திரங்கள், அறுதியாவணங்கள், பரிமாற்றப் பத்திரங்கள் ஆகியவைகளை எழுதிக் கொடுக்க முத்திரைத்தாள் சட்டத்தின் 41-ம் பிரிவின் கீழ் முத்திரை தாள்களுக்குப் பதிலாக ரொக்கம் பெற்றுக் கொள்ள உதவிப்பதிவாளர்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது. முத்திரைத்தாள் தீர்வை 1,000 ரூபாய்க்கு மேற்படுகிற பத்திரங்களைப் பொறுத்த மட்டில் முத்திரைத்தாள் தீர்வையை ரொக்கமாக கருவூலத்தில் செலுத்திவிட்டு அதற்குரிய செலுத்துச் சீட்டை அப்பத்திரங்களுடன் பதிவுக்காகக் கொடுக்க அனுமதிக்கப்படுகிறது.

4. எழுத்து மூலம் செய்து கொள்ளப்படும் ஒப்பந்தங்கள் அனைத்தும் 1899 ஆம் ஆண்டு இந்திய முத்திரைத்தாள் சட்டத்தின்கீழ் முத்திரைத்தாள் தீர்வை விதிக்கப்படுவதற்கு உரியனவாகும். இம் மாநிலத்தில் பல்வேறு ஆவணங்களுக்கு விதிக்கத்தக்க முத்திரைத்தாள் தீர்வை வீதங்கள் மேற்சொன்ன சட்டத்தில் விவர அட்டவணை 1-ல் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தவிர, உள்ளாட்சி மன்றங்களின் சட்டத்திற்கிணங்க, சில குறிப்பிட்ட ஆவணங்கள் தொடர்பாக சில சொத்துக்களுக்கு முத்திரைத்தாள் வரியோடு 5 சதவீதத்திற்கு மேற்படாத மேல்வரிக்கட்டணமும் விதிக்கப்படுகிறது. இவ்வாறு வசூலிக்கப் பெற்ற வரி உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படுகிறது.

5. முத்திரைத்தாள்களின் ஒவ்வொரு வகையிலும் பெறப்பட்ட வருவாய் பற்றிய விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன :—

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய).
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
1. நீதித்துறை சாரா முத்திரைத்தாள்களின் வருவாய்.	30,57,73,553·05	27,62,1,400·90

1980 ஜூலை 11]

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய).
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
2. நீதித்துறை சார்ந்த முத்திரைத்தாள்களின் வருவாய்.	5,76,22,971·55	5,36,43,347·10
3. உண்டியலுக்கான முத்திரைத்தாள்களின் வருவாய்.	13,71,861·00	11,71,673·00
4. பசை தோய்த்த முத்திரைத்தாள்களின் மூலம் வருவாய். ..	1,99,21,219·95	1,71,50,980·95
5. ஏனைய வருவாய்	3,35,15,842·74	2,78,50,939.99
மொத்தம் ..	41,82,05,448·29	37,60,18,341·94
திருப்பிச் செலுத்தப்படும் தொகைகள்.		
நீதித் துறை சாரா முத்திரைத்தாள்கள். ..	12,01,67,780·62	10,13,37,062·92
நீதித் துறை சார்ந்த முத்திரைத்தாள்கள் ..	14,69,794·83	17,81,855·07
மொத்தம் திருப்பிச் செலுத்தப்படும் தொகை.	12,16,37,575·45	10,31,18,917·99

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

முத்திரைத்தாள்களின் வகை.	1978–79 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய்.	1979–80 ஆம் ஆண்டில் பெற்ற வருவாய் (சனவரி 80 முடிய)
(1)	(2)	(3)
	ரூ. பை.	ரூ. பை.
செலவுகள்—		
1. முத்திரைத்தாள்கள் விற்பனையில் தள்ளுபடி.	40,05,905·22	34,69,232·72
2. பணியாளர்கள் செலவு	5,67,121·37	4,67,572·19
3. நாசிக்கில் உள்ள முத்திரைத்தாள் மையப் பண்டக சாலையிலிருந்து வழங்கப்பட்ட முத்திரைத்தாள்கள் மதிப்பு.	29,90,772·94	13,09,119·80
மொத்தச் செலவு ..	75,63,799·53	52,45,924·71
மொத்த வருவாய் ..	41,82,05,448·29	37,60,18,341·94
மொத்தச் செலவும் திருப்பிக் கொடுக்கப்பட்ட தொகைகளும்	12,92,01,374·98	10,83,64,842·70
நிகர வருவாய் ..	28,90,04,073·31	26,76,53,499·24

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

1980 ஜூலை 11]

6. முத்திரைத்தாள் வருவாய் நிர்வாகம் மனநிறைவு அளிப்பதாக உள்ளது.

7. தகுதியுடைய பொது அற நிறுவனங்களுக்கு முத்திரைத் தாள் தீர்வையில் ஒரு பகுதி அல்லது முழுவதும் தள்ளுபடி செய்யப்படுகிறது.